[1982 மார்ச் 9

கோவை-உதகை இடையே ஹெலிகாப்டர் போக்குவரத்துப் பணி.

*வினா எண் 435—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூருக்கும் உதகமண்டலத்திற்கும் இடையே ஹெலிகாப்டர் போக்குவரத்து வசதி செய்ய மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஆம். இது சம்பந்தமாக மத்திய அரசிடம் மாநில அரசு தொடர்பு கொண்டிருக்கிறது.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஹெலிகாப்டர் போக்குவரத்து மிகமிக அவசியம் என்பதை உணர்ந்து மத்திய சர்க்காரை, மீண்டும் வற்புறுத்தி விரைவில் அரசு நடவடிக்கை எடுக்குமா? ஏற்கெனவே மத்திய சர்க்கார் அங்கே இருக்கிற ரயில் போக்குவரத்தைக்கூட நிறுத்தி விட வேண்டும் என்று, நீண்டகாலத் திட்டம் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையிலே இந்த ஹெலிகாப்டர் போக்கு வரத்தையாவது பெற அரசு அவர்களை மீண்டும் வற்புறுத்தி முயற்சிகளை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதையெல்லாம் அறிந்துதான் மத்திய அரசாங் கத்தை மாநில அரசு வற்புறுத்திக் கொண்டேயிருக்கிறது. தொடர்ந்தும் வற்புறுத்திக் கொண்டுதான் இருக்கும். மேலும் இது குறித்து எடுத்துச் சொல்வதிலே எந்தவித இடையூறும் அரசுக்கு இல்லை.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, சீசன் காலங்களில் பஸ்களிலே நிற்கக் கூட கொஞ்சமும் இடம் இல்லாமல் மக்கள் அவதியுறும் நிலை இருக்கிறது. ரயில்வே போக்குவரத்தும் தற்காலிகமாக நிறுத்தப்பட இருக்கிறது. அப் படிப்பட்ட நிலைமையில் மக்களுக்கு இந்த ஹெலிகாப்டர் போக்கு வரத்தாவது பயன்படும் என்ற வகையில் இதை மிக விரைவிலே ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் அரசு உடனடியாக ஈடு படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஹெலிகாப்டர் வந்து விடுவதன் காரணமாக பேருந்து களில் நெரிசல் குறைந்து விடும் என்று சொல்லிவிட முடியாது. சில நேரங்களில் பேருந்துகளின் போக்குவரத்தில் தடை ஏற்படும்

1982 மார்ச் 9]

காலங்களில் இந்த ஹெலிகாப்டர் போக்குவரத்து பெரிதும் பயன் படும் என்பது உண்மைதான் என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த உணர்வின் அடிப்படையிலேயே, அது சீக்கிரமாக வேண்டும் என்ற வகையில்தான் மத்திய அரசாங்கத்தை மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு வருகிறது. இதைத் தவிர, மாநில அரசு வேறு என்ன செய்ய முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

சோழன் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகத்தைத் திருச்சியில் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 436—திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழன் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகத்தை திருச்சியில் அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) தற்போது சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் எண்ணிக்கை சுமார் 800 ஆக இருப்பதால் அரசு இக் கழகத்தை இரண்டாகப் பிரிக்க திட்டமிட்டுள்ளது. இதுபற்றிய செயற்குறிப்பு சோழன் சாலைப் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநரிடமிருந்து வந்தவுடன் அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

திரு. மே. அ. இராசகுமார் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சோழன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கத் திட்டம் உள்ளதாக கூறினார்கள். அப்படி பிரிக்கப்படும்போது, திருச்சியிலே ஏற்படவிருக்கும் போக்குவரத்துப் பிரிவிற்கு, ராஜராஜசோழன் போக்குவரத்துக் கழகம் என்ற பெயர் வைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்திற்கு பெயர் இடுவதை இப்பொழுதே இந்த நேரத்திலேயே சொல்வது என்பது சாதாரண விஷயம் அல்ல. என்ன பெயர் வைத்தாலும் எது பொருத்தமாக இருக்கும் என்பதையெல்லாம் ஆராய்ந்து தான் பின்னர் முறையாக பெயர் வைக்கப்படும். இதை பிறகு முடிவெடுக்கலாம்.